### பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக

# தென்னாப்பிரிக்கா சென்றார் மோடி

- **சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்து பேசுவார் என்று தெரிகிறது. பின்னர், கிரீஸ் நாட்டுக்கும் பயணம் மேற்கொள்கிறார்.**

**ஜோகன்னஸ்பர்க்**

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக தென்னாப்பிரிக்கா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜோகன்னஸ்பர்க் நகரில் அரசு மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. மாநாட்டுக்கு இடையே சீன அதிபர் ஜி ஜின்பிங்கை, பிரதமர் மோடி சந்தித்து பேசி, எல்லை பிரச்சினைகளுக்கு சுமுக தீர்வு காண்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'பிரிக்ஸ்' அமைப்பில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய 5 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இதன் 15-வது உச்சி மாநாடு தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் நேற்று தொடங்கியது.

கரோனா பரவல் காரணமாக கடந்த 3 ஆண்டுகளாக இம்மாநாடு காணொலியில் நடந்தது. கடந்த 2019-ம் ஆண்டுக்கு பிறகு முதல்முறையாக பிரிக்ஸ் மாநாட்டில் தலைவர்கள் நேரடியாக பங்கேற்கின்றனர். ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை சேர்ந்த 20-க்கும் மேற்பட்ட தலைவர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கின்றனர்.

**மோடிக்கு உற்சாக வரவேற்பு**

இம்மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி நேற்று தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகருக்கு சென்றார். அங்கு உள்ள வாட்டர்க்ளூஃப் விமானப் படை தளத்தில் தரையிறங்கிய மோடிக்கு அரசு மரியாதையுடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தென்னாப்பிரிக்க துணை அதிபர் பால் ஷிபோகோசா மஷாடைல் அவரை வரவேற்றார்.

தொடர்ந்து, ஜோகன்னஸ்பர்க்கில் பிரிக்ஸ் வர்த்தக அமைப்பின் தலைவர்கள் பங்கேற்ற கலந்துரையாடல், பிரிக்ஸ் தலைவர்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள் நடந்தன. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.

மாநாடு நாளை வரை நடைபெறுகிறது. இதில், பிரிக்ஸ் அமைப்பை விரிவுபடுத்தி, ஈரான், வங்கதேசம் ஆகிய நாடுகளையும் உறுப்பினர்களாக சேர்ப்பது குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.



தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகருக்கு நேற்று வந்த பிரதமர் மோடிக்கு, அங்குள்ள இந்திய சமூகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**ஜின்பிங்கை சந்திப்பாரா?**

இந்தியா - சீனா இடையிலான எல்லை பிரச்சினைகளுக்கு தீர்வு காண இரு நாட்டு ராணுவ கமாண்டர்கள் அளவிலான பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அடுத்த மாதம் இந்தியா தலைமையில் டெல்லியில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டில் பல நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர். இதில் பங்கேற்க சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் இந்தியா வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், பிரிக்ஸ் மாநாட்டுக்கு இடையே சீன அதிபர் ஜி ஜின்பிங்கை, பிரதமர் மோடி சந்தித்து பேச வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. அப்போது, எல்லை பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, மீண்டும் சுமுக உறவை ஏற்படுத்த பிரதமர் மோடி முயற்சி மேற்கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாப்பிரிக்க பயணத்துக்கு முன்பு, செய்தியாளர்களிடம் பிரதமர் மோடி கூறியதாவது:

எதிர்காலத்தில் ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டிய துறைகள் மற்றும் அமைப்பு சார்ந்த வளர்ச்சியை மறுஆய்வு செய்ய பிரிக்ஸ் உச்சி மாநாடு பயனுள்ள வாய்ப்பை வழங்கும். வளர்ச்சியின் தேவைகள், பன்முக அமைப்புகளின் சீர்திருத்தம் உட்பட தெற்கத்திய நாடுகள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்து ஆலோசிப்பதற்கான தளமாக பிரிக்ஸ் அமைப்பை நாங்கள் கருதுகிறோம்.

இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்கும் தலைவர்களுடன் கலந்துரையாட ஆவலாக உள்ளேன். மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெறும் பிரிக்ஸ் - ஆப்பிரிக்கா மக்கள் தொடர்பு மற்றும் பிரிக்ஸ் பிளஸ் உரையாடல் நிகழ்விலும் பங்கேற்கிறேன். பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்கும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாட உள்ளேன். ஜோகன்னஸ்பர்க்கில் சில தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவதையும் எதிர்நோக்கியுள்ளேன்.

**கிரீஸ் பயணம்**

கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் அழைப்பின்பேரில், ஏதென்ஸ் நகருக்கு வரும் 25-ம் தேதி செல்கிறேன். பழமைவாய்ந்த கிரீஸ் நாட்டுக்கு நான் செல்வது இதுவே முதல்முறை. 40 ஆண்டுகளுக்கு பிறகு கிரீஸ் செல்லும் முதலாவது இந்திய பிரதமர் என்ற பெருமையும் எனக்கு கிடைக்கும்.

இந்திய - கிரேக்க நாகரிகங்களுக்கு இடையிலான தொடர்புகள் 2,000 ஆண்டுகளுக்கு மேலானவை. வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கலாச்சாரம் மற்றும் மக்கள் இடையிலான தொடர்புகள் போன்றவற்றில் ஒத்துழைப்புடன் செயல்படுவது இரு நாடுகளையும் நெருக்கமாக கொண்டுவந்துள்ளது. கிரீஸ் நாட்டுக்கு நான் செல்வது, நமது பன்முக உறவில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கிவைக்கும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

திட்டமிட்டபடி நிலவின் தென்துருவத்தில்

# சந்திரயான்-3 லேண்டர் கலன் இன்று மாலை தரையிறங்குகிறது

**இஸ்ரோ அறிவிப்பு**

● சென்னை

சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர், திட்டமிட்டபடி இன்று மாலை 6 மணி அளவில் நிலவின் தென்துருவத்தில் தரையிறங்குகிறது.

நிலவில் தரையிறங்கி ஆராய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) ரூ.615 கோடியில் வடிவமைத்தது. எல்விஎம்-3 ராக்கெட் மூலம் இந்த விண்கலம் கடந்த ஜூலை 14-ம் தேதி விண்ணில் ஏவப்பட்டது. 40 நாள் பயணத்துக்கு பிறகு, விண்கலம் தற்போது நிலவின் சுற்றுப்பாதையில் வலம் வருகிறது.

இந்நிலையில், திட்டமிட்டபடி லேண்டர் கலன் இன்று மாலை நிலவில் தரையிறங்க உள்ளது. இதற்கான இறுதிகட்ட பணிகளில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நிலவுக்கு அருகே 25 கி.மீ உயரத்துக்கு லேண்டர் வந்ததும் எதிர்விசையை பயன்படுத்தி அதன் வேகம் குறைக்கப்படும். அதன்மூலம் தரைப் பகுதிக்கும், லேண்டருக்குமான உயரம் படிப்படியாக குறையும். தரையில் இருந்து 150 மீட்டர் உயரத்துக்கு லேண்டர் கொண்டுவரப்பட்டதும் சில விநாடிகள் அப்படியே அந்தரத்தில் நிறுத்தி வைக்கப்படும். அதில் உள்ள சென்சார்கள் மூலம், தரையிறங்க சரியான சமதள பரப்புடைய இடம் தேர்வு செய்யப்படும்.

லேண்டரின் வேகம் பூஜ்ஜிய நிலையை எட்டியதும் மாலை 6.04 மணிக்கு நிலவின் தென்துருவப் பகுதிக்கு அருகே மெதுவாக தரையிறங்கும். லேண்டர் தரையிறங்கிய 3 மணி நேரத்துக்கு பிறகு, அதில் வைக்கப்பட்டுள்ள ரோவர் வாகனம் வெளியே வந்து ஆய்வு மேற்கொள்ளும்.

இன்று அரங்கேற உள்ள இந்த நிகழ்வை இந்தியா மட்டுமின்றி பல்வேறு நாடுகளும் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளன. சமீபத்தில் நிலவில் தரையிறங்கும்போது ரஷ்யாவின் லூனா-25 விண்கலம் விழுந்து நொறுங்கிய நிலையில், சந்திரயானின் பயணம் மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.



சந்திரயான்-2 பயணத்தின்போது, நிலவில் வேகமாக தரையிறங்கியதால், லேண்டர் செயலிழந்தது. இந்த முறை லேண்டரின் கால்கள் மிகவும் வலுவானதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. மேடு, பள்ளம் நிறைந்த நிலவில் சமதளப் பரப்பை கண்டறிந்து தரையிறங்க ஏதுவாக அதன் கால்களில் டெலஸ்கோப் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. கார் வேகத்தை கட்டுப்படுத்தும் லேசர் டாப்ளர் வெலாசிட்டி சென்சார் (எல்விடி) தொழில்நுட்பம், லேண்டரில் உள்ளது. எனவே, இந்த முறை வெற்றி உறுதி என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளனர்.

**நேரலையில் காணலாம்**

லேண்டர் இன்றுதரையிறங்கும்நிகழ்வை https://isro.gov.in என்ற இணையதளம், https://youtube.com/watch?v=DLA_64yz8Ss என்ற யூ-டியூப் பக்கம், https://facebook.com/ISRO என்ற முகநூல் பக்கம், டிடி நேஷனல் தொலைக்காட்சி ஆகியவற்றில் இன்று மாலை 5.20 மணியில் இருந்து பொதுமக்கள் காணலாம்.

நிலவில் ஒருவேளை சூழல் சாதகமாக இல்லாவிட்டால் ஆக.27-ல் லேண்டர் தரையிறங்கும் என அகமதாபாத் விண்வெளி பயன்பாட்டு மையத்தின் இயக்குநர் நிலேஷ் எம்.தேசாய் தெரிவித்துள்ளார்.

EVA STALIN IAS ACADEMY

# உலகின் முக்கியமான பிரச்சினைகளை ஜி-20 மன்றத்தின் மூலம் தீர்க்கலாம்

## சட்டப் பல்கலை. நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர்.என்.ரவி உரை

**சென்னை**

ஜி-20 மன்றத்தின் மூலம் பருவநிலை மாற்றம், வறுமை போன்ற உலகின் பல்வேறு முக்கியப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்தார்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சார்பிலான சுற்றுலா குறித்த ஜி-20 உச்சி மாநாடு கடந்த ஆகஸ்ட் 20-ம் தேதி தொடங்கி நேற்றுடன் முடிவடைந்தது. இதன் நிறைவு விழா சென்னை தரமணியில் உள்ள அதன் வளாகத்தில் நடைபெற்றது. இதில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமை விருந்தினராகப் பங்கேற்று, பல்கலைக்கழக வளாகத்தை பார்வையிட்டார்.

விழாவில் ஆளுநர் ரவி பேசியதாவது: தற்போதைய காலத்தில் டிஜிட்டல் இந்தியா மிகவும் அவசியமானதாகும். அதைக் கொண்டு வருவது மிகப்பெரிய சவாலாகும். அதனால் டிஜிட்டல் இந்தியாவை உருவாக்கும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளது. உலக அளவில் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை செய்பவர்களில் 45% பேர் இந்தியாவில் உள்ளனர். டிஜிட்டல் இந்தியாவால் மட்டுமே இது சாத்தியமானது. இதன் மூலம் உலக அரங்கில் இந்தியா தலைநிமிர்ந்து நிற்கிறது.

இதுதவிர டிஜிட்டல் இந்தியா மூலம் மக்கள் நேரடியாகப் பயனடைந்து வருகின்றனர். உதாரணத்துக்கு ஜன்தன் வங்கிக் கணக்கு மூலம் முறைகேடுகள் இல்லாமல் பணப்பரிவர்த்தனை நடைபெறுகிறது. அதேபோல், விரைவில் பொருளாதாரத்தில் உலகளவில் இந்தியா முதல் 3 இடங்களில் இடம்பெறும். தற்போது கல்வி, வேலைவாய்ப்பில் அதிகளவில் பெண்கள் இடம் பெறுவது மகிழ்ச்சியாக உள்ளது.

இந்த ஜி-20 மன்றத்தின் மூலம் பருவநிலை மாற்றம், வறுமை போன்ற உலகின் பல முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த விழாவில் ஜி-20 உறுப்பு நாடுகளின் தூதரக அதிகாரிகள், சட்டப் பல்கலை. துணைவேந்தர் என்.எஸ்.சந்தோஷ் குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# சாதி வன்மத்தை வேரறுக்கும் வழிகள்

இரா.காமராசு

புதன், ஆகஸ்ட் 23, 2023

# உச்ச நீதிமன்றத்தின் கையேடு: மாற்றத்துக்கான உத்தரவாதம்

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று அரசமைப்புச் சட்டம் அறிவித்தாலும், சட்டத் துறையில் பயன்பாட்டில் இருக்கும் சொற்கள் சில பாலினப் பாகுபாட்டையும் பாலினரீதியான அடையாளப்படுத்துதலையும் கொண்டிருக்கின்றன. அவற்றைக் களையும்விதமாக, பாலினரீதியான அடையாளப்படுத்துதல் அல்லது முத்திரை குத்துதலை எதிர்கொள்ளும் வகையிலான கையேட்டை உச்ச நீதிமன்றம் வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது; இது சமூக மாற்றத்துக்கான முன்னெடுப்பும்கூட. உச்ச நீதிமன்றம் போன்ற அதிகாரம் பொருந்திய அமைப்பு, ஒரு விஷயத்தைத் திட்டவட்டமாக வரையறுக்கிறபோது, அது சமூகத்தில் ஆக்கபூர்வ மாற்றத்துக்கு வழிவகுக்கும்.

பொதுவாக நாடு, மொழி, சாதி, மதம், நிறம், பாலினம் சார்ந்து குறிப்பிட்ட பிரிவினரையோ, அந்தப் பிரிவைச் சார்ந்த தனி மனிதர்களையோ முத்திரை குத்தும் பிற்போக்குத்தனம் உலகம் முழுவதும் நிலவிவருகிறது. கையேட்டில் இதைக் குறிப்பிட்டிருக்கும் உச்ச நீதிமன்றம், அப்படியான முத்திரை குத்தும் சொற்களை அல்லது பழைய அடையாளம் கொண்டவற்றுக்கு மாற்றாக, பாகுபாடற்ற பொதுவான சொற்களைச் சட்டத் துறையினர் பயன்படுத்த வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. இந்திய மக்கள் அனைவரும் அறிவியலிலும் கணிதத்திலும் சிறந்தவர்கள் எனப் பெரும்பாலான வெளிநாட்டினர் நம்புவதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளது உச்ச நீதிமன்றம். உண்மைக்கும் அடையாளப்படுத்துதலின் விளைவாக ஏற்படும் கற்பிதத்துக்கும் உள்ள பாகுபாட்டை இது துல்லியமாக விளக்குகிறது.

எவ்விதச் சார்பும் பயமும் இல்லாமல் நீதியைப் பரிபாலனம் செய்வது எவ்வளவு முக்கியமோ, அதேபோலத்தான் பாகுபாடற்ற பொதுவான சொற்களைப் பயன்படுத்துவதும் முக்கியம் என்பதை உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. பாகுபாடு நிறைந்த சொற்பிரயோகத்தால் பெண்களே பெரும்பாலும் அவமானப்படுத்தப்படுகிறார்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, தீர்ப்பு எழுதுகையில் எந்தெந்த சொற்களைத் தவிர்க்க வேண்டும், எவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பது கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்களின் நடத்தையை, உடையணியும் பாங்கை வைத்து அவர்கள் மீதான பிம்பத்தைக் கட்டமைப்பது தவறு எனவும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. உதாரணத்துக்கு, கற்புக்கரசி என்பதற்குப் பதிலாகப் பெண் எனவும், தகாத உறவு என்பதற்குப் பதிலாகத் திருமணத்தைத் தாண்டிய உறவு எனவும் குறிப்பிடலாம் என உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது. பாலியல் வன்முறை, பாலியல் தேர்வு, குழந்தைகள் மீதான வன்கொடுமை உள்ளிட்டவற்றுக்கும் மாற்றுச் சொற்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. பெண்கள் மீது காலங்காலமாகச் சுமத்தப்பட்டிருக்கும் இழிவான அடையாளப்படுத்துதலையும் கற்பிதத்தையும் களையும்விதமாகப் பல சொற்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஒரு தீர்ப்பில் நீதிபதிகள் உச்சரிக்கும் சொல் என்பது வெறுமனே சொல் மட்டுமல்ல. சட்டத்தின் உயிர்த்தன்மையைத் தாங்கி நிற்கும் அந்தச் சொல்தான். "நீதிபதிகள் பயன்படுத்தும் சொற்கள், அவர்களது கருத்தாக மட்டும் இருப்பதில்லை, சமூகத்தின் கருத்தையும் அவை பிரதிபலிக்கின்றன. பெண்களைப் பற்றிய பிற்போக்கான, பழமையான கருத்தையோ தவறான கருத்தையோ நீதித் துறை சொல்கிறபோது, பாலின பேதமின்றி அனைவருக்கும் சமமான உரிமையைப் பரிந்துரைக்கும் நம் இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானதாக அது அமைந்துவிடுகிறது" என உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் குறிப்பிட்டுள்ளது நீதித் துறைக்கு மட்டுமல்ல, எல்லா துறைகளுக்கும் பொருந்தும். அரசாங்கத்தின் ஒவ்வொரு அதிகாரக் கட்டமைப்பும் பாலின பேதத்தைக் களையும் முன்னெடுப்புகளைச் செயல்படுத்த வேண்டும். அரசு அதை உறுதிப்படுத்த வேண்டும்.

EVA STALIN IAS ACADEMY

### காவிரி நதி நீர் பங்கீட்டு வழக்கை விசாரிக்க

# நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையில் அமர்வு அறிவிப்பு

### ● கர்நாடகாவில் இன்று அனைத்துக் கட்சி கூட்டம்

இரா.வினோத்

● பெங்களூரு / புதுடெல்லி

காவிரி நதிநீர் பங்கீட்டு வழக்கை விசாரிக்க நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையில் 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வை உச்ச நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

காவிரி நதிநீர் பங்கீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை பின்பற்றாத கர்நாடகாவுக்கு எதிராக தமிழக அரசு கடந்த வாரம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இதை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என நேற்று முன்தினம் வலியுறுத்தியது. இந்நிலையில், தமிழக அரசின் மனுவுக்கு கர்நாடக அரசு பதில் மனு தாக்கல் செய்தது.

தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், "காவிரி நதி நீர் பங்கீட்டு வழக்கை விசாரிக்க 3 நீதிபதிகள் புதிய அமர்வு அமைக்கப்படும்" என தெரிவித்தார். இதை தொடர்ந்து உச்ச நீதிமன்ற பதிவாளர் அலுவலகம் நேற்று மாலை 3 நீதிபதிகள் அடங்கிய புதிய அமர்வு குறித்து அறிவிப்பை வெளியிட்டது.

அதன்படி உச்ச நீதிமன்ற நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வில் நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா, பி.கே.மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு காவிரி வழக்கை விசாரிக்கும்.

இந்த அமர்வு வரும் 25-ம் தேதி இவ்வழக்கைவிசாரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழகத்துக்கு காவிரி நீர் திறக்கப்பட்டதை கண்டித்து கர்நாடக மாநிலம் மண்டியாவில் விவசாய அமைப்பினர் நேற்று போராட்டம் நடத்தினர். மண்டியாவில் உள்ள ஜெயசாமராஜா சதுக்கத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட கர்நாடக மாநில விவசாய சங்கத்தினர் முதல்வர் சித்தராமையாவுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

பின்னர் பெங்களூரு - மைசூரு தேசிய நெடுஞ்சாலையில் மாட்டு வண்டியை நிறுத்தி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். 100-க்கும் மேற்பட்டோர் இந்த போராட்டத்தில் பங்கேற்றதால் பெங்களூரு - மைசூரு இடையே சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து போலீஸார் விவசாய அமைப்பினரை அங்கிருந்து அப்புறப்படுத்தி, கைது செய்தனர்.

இந்நிலையில் கர்நாடக அரசு காவிரி விவகாரம் குறித்து ஆலோசிப்பதற்காக புதன்கிழமை மாலை அனைத்து கட்சி கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. முதல்வர் சித்தராமையா தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்துக்கு பாஜக, மஜத, கர்நாடகாவை சேர்ந்த எம்பிக்கள், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளை சேர்ந்த எம்எல்ஏக்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.